சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்



# கர்த்தர் உன் நடுவில் வாசம் பண்ணுவார்



**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகள் அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்.**

**சீயோன் குமாரத்தியே! நீ கெம்பீரித்துப் பாடு. இதோ நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன் என்று ஆண்டவர் சொல்கிறார். சகரியா 2:10**

இந்த உலகத்தில் எத்தனை கோடி ஆசீர்வாதங்கள் நமக்கு இருந்தாலும், அதைக்காட்டிலும் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் நம் நடுவில், நமக்குள் வந்து வாசம்பண்ணுவதற்கு இணையாக வேறு எதுவும் இருக்க முடியாது. **1 தீமோ 6:16-ல் ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர், அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.** பவுல் அவரை பற்றி சொல்லும் போது ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர் என்று எழுதுகிறார். அவர் நமக்குள் உலாவுவது, வாசம்பண்ணுவது எத்தனை பாக்கியம். வெளி 21:3-ல் மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத் தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர் களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். என்று சொல்லப்பட்டுள்ளது. அவர் நமக்குள் வந்து வாசம்பண்ண நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத்தான் இந்த செய்தியின் வாயிலாக பார்க்கப் போகிறோம்.

## தேவனுக்கு இதய கதவைத் திறக்க வேண்டும்

**இதோ நான் வாசற்படியில் நின்று கதவைத் தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். வெளி 3:20**

தேவாதி தேவன் நமக்குள் பிரவேசிக்க, நமக்குள் வந்து வாசம்பண்ண முதலாவது நமது இதயக்கதவை திறக்க வேண்டும். ஒருமுறை எலிசபெத் மகாராணி தேசத்து மக்களை சுற்றிப் பார்க்க புறப்பட்ட போது சூரியன் மறைந்தது இருள் சூழ்ந்தது, கடும் மழை பிடித்துக் கொண்டது. அருகில் இருந்த ஒரு வீட்டில் உதவி கிடைக்கும் என்ற எண்ணத்தில் கதவைத் தட்டினார். மழைக்கு கொஞ்சம் ஒதுங்கலாம் அல்லது ஒரு குடையை வாங்கிக் கொள்ளலாம் என்று வெகு நேரம் தட்டியும் உள்ளே இருந்த பெண் கதவைத் திறக்கவில்லை. யாரோ வீணாக கதவை தட்டுவார்கள் அல்லது டோனேஷன் வாங்கவோ, கடன் வாங்கவோ, வந்து தொல்லை கொடுப்பார்கள் என்று எண்ணிக் கதவைத் திறக்கவேயில்லை. கொஞ்ச நேரத்தில் அரண்மனையிலிருந்து எலிசபெத் மகாராணியை தேடி இரதமும் குதிரையும் வந்தது. அதில் ஏறிப்புறப்பட்டு சென்றார்கள்.

அப்போதுதான் அந்த வீட்டில் இருந்த பெண்ணுக்கு வந்தது மகாராணி என்று தெரிய வந்தது. அதற்கு பிறகு மகாராணியைப் பார்க்கும்

சந்தர்ப்பம் அந்த பெண்ணுக்கு கிடைக்க வேயில்லை ஐயோ! கதவை திறந்து பார்த்திருந்தால் எத்தனை பாக்கியம் கிடைத்திருக்கும் இழந்து விட்டேனே என்று கண்ணீர் வடித்தாள். அதுபோலத்தான் ஆண்டவர் இயேசு நமக்குள் பிரவேசிக்க, நமக்குள் தங்கி வாசம்பண்ண நமது இதய வாசற்படியில் நின்று தட்டிக் கொண்டே இருக்கிறார். யார் கதவைத் திறந்து இயேசுவே எனக்குள் வாரும் என்று கூப்பிடுகிறோமோ, எனக்குள் உலாவ நான் இடமளிக்கிறேன் நீர் ஏன் வெளியே நிற்க வேண்டும் வாரும் இயேசப்பா என்று கதவைத் திறந்தால் நமக்குள் இயேசு வந்து வாசம் பண்ணுவார். நாம் அவரோடு வாசம் பண்ணி, அவருடைய பிள்ளைகளாக இருப்போம்.

ஒருநாள் சின்ன சாமுவேலின் இதயக்கதவை ஆண்டவர் தட்டினார். சாமுவேல் அதை அறியாமல் இங்கும் அங்கும் ஓடி குருவிடம் வந்து என்னை கூப்பிட்டீரே என்கிறான். அவர் சொல்லித் தந்தபடி இனி அந்த குரல் கேட்டால் கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்ல சொல்லிக் கொடுத்தான் அப்படி சொன்ன போது ஆண்டவருடைய வெளிப்பாடுகளை, சத்தத்தைக் கேட்டு அவர் தமக்குள் வந்து வாசம்பண்ணும் பாக்கியம் பெற்றான். **1 சாமு 3:15-ல் சாமுவேல் விடியற்காலமட்டும் படுத்திருந்து, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்தான்.** சாமுவேல் விடியற்காலம் மட்டும் படுத்திருந்து கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்தான். அவன் தேவனுடைய சத்தத்திற்கும், அவருடைய சித்தத்திற்கும் தன் இதயகதவைத் திறந்ததால் தான் முழு இஸ்ரவேலுக்கும் அருமையான தீர்க்கதரிசியாய் எழும்ப முடிந்தது. இன்றைக்கு நாமும் தேவனுடைய சத்தத்திற்கு நமது இதய கதவை திறக்கும் போது அவருடைய சித்தத்தை செய்யக் கூடிய வல்லமையான பாத்திரமாக தேவன் நம்மை பயன்படுத்துவார்.

**நம்முடைய பிதாக்கள் துரோகம்பண்ணி, நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, அவரை விட்டு விலகி, தங்கள் முகங்களைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டுத் திருப்பி, அதற்கு முதுகைக் காட்டினார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலி செலுத்தாமலும், தூபங்காட்டாமலும், விளக்குகளை அணைத்துப்போட்டு, மண்டபத்தின் கதவுகளையும் பூட்டிப்போட்டார்கள். ஆகையால் கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் வந்து, அவர் இவர்களை, நீங்கள் உங்கள் கண்களினால் காண்கிறபடி, துயரத் துக்கும் திகைப்புக்கும் பழிப்புக்கும் ஒப்புக் கொடுத்தார். 2 நாளா 29:6,7,8** வசனங்களை வாசித்தால் எசேக்கியா ராஜா ஆலயத்தின் கதவுகளை திறந்து அதை பழுது பார்த்து, சுத்தம் செய்ய ஆசாரியர்களையும், ஜனங்களையும் வேண்டி கொண்டான். அதற்கு முன்னால் ஜனங்கள் பொல்லாப்பு செய்து கர்த்தரை விட்டு விலகி தங்கள் முகங்களை கர்த்தருடைய வாசஸ்தலங்களை விட்டு திருப்பி முதுகைக் காட்டினார்கள். அவர்கள் தேவனுக்கு பலி செலுத்தவில்லை, தூபம்காட்டவில்லை, விளக்குகளை அணைத்து மண்டபத்தின் கதவுகளைப் பூட்டிப் போட்டார்கள். அதனால் ஆண்டவருடைய கோபம் மூண்டதால் நீங்கள் உங்கள் கண்கள் காண்கிறபடி துயரத்துக்கும், திகைப்புக்கும், பழிப்புக்கும் ஒப்புக் கொடுத்தார் என்று எசேக்கியா ராஜா அறிந்து, ஜெபம் என்ற தூபம் எங்கே கர்த்தருடைய வார்த்தை என்ற வெளிச்சம், விளக்கு எங்கே என்று ஆலயகதவை திறந்து சுத்தம் செய்த போது தேவன் இரங்கினார். தேவனே என் மக்கள் தங்களை சுத்திகரித்துக் கொள்வதில் தவறியிருந்தாலும் மன்னிப்பீராக என்று அவன் செய்த விண்ணப்பத்தைக் கேட்டு ஜனங்களுக்கு தேவன் அனுகூலம் செய்தார். அதுவரை தங்களை கெடுத்துக் கொண்டிருந்த ஜனங்களின் விண்ணப்பத்தை தேவன் கேட்டார். அருமையான சகோதரிகளே நீங்களும் உங்கள் வாழ்க்கையில் தேவனுக்கு திறக்காமல் அடைத்துப் போட்ட கதவை திறந்து, இயேசுவே என்னை மன்னியும், என் பாவங்களை மன்னித்து திரும்ப எனக்கு இரங்கும் என்று இயேசுவை நோக்கி கூப்பிடுங்கள்.

**ஏசா 57:15-ல் நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார். உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.** நொறுங்குண்டு பணிந்தவர்களின் ஆவியிடத்தில் வாசம்பண்ணுகிறேன் என்று சொன்ன ஆண்டவர் உங்களிடத்தில் வருவார், உங்களுக்குள் வாசம் பண்ணுவார்.

## தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ள வேண்டும்

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா? 1 கொரி 316**

நாம் தேவன் தங்கும் ஆலயமாயிருக்கிறோம். **இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். யோவா 14:23.** இயேசு ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் கற்பனைகளை கைக்கொள்வான். அவனில் என்பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் என்று சொல்லுகிறார். தேவன் தங்கும் ஆலயமாயிருக்கிற நாம் நம்மை எவ்வளவு ஜாக்கிரதையோடு, ஆவி, ஆத்துமா, சரீரத்தை கறை, திறையில்லாமல் காக்க வேண்டும். நாம் அவர் கற்பனைகளை கடைபிடித்து, வாழ்க்கையில் பரிசுத்தத்தைக் காக்க நாமும் தேவனுக்கு இணைந்து செயல்பட வேண்டும். தானியேல் ராஜாவின் போஜனத்தினால் என்னை தீட்டுப்படுத்த மாட்டேன் என்றும், யோசேப்பு போத்திபாரின் மனைவியின் பாவத்துக்கு உடன்பட மாட்டேன் என்றும் உறுதியாய் நின்றார்கள். அப்போது தேவன் அவர்களுக்கு அந்த தீர்மானத்தில் உறுதியாய் நிற்க பெலன் கொடுத்தார். அதினால் அவர்களுக்கு மேன்மையும் கொடுத்தார்.ஒவ்வொரு நாளும் நமக்குள் அநேக போராட்டங்கள் வரும். கோபங்கள் எரிச்சல்கள், ஆசைகள், இச்சைகள் போன்ற தீமையான வேர்களை களைய வேண்டும். நமக்கு வேதவசனமும், ஆவியானவரும் உறுதுணையாய் இருப்பதை உணர்ந்து கொண்டு, அவரில் அன்பு கூர்ந்து கற்பனைகளை கைக்கொண்டால் நம் சரீரமாகிய ஆலயம் தூய்மையாக இருக்கும். அப்போது பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகிய திரித்துவ தேவன் நாங்கள் வந்து வாசம் பண்ணுவோம் என்று சொல்லி நமக்குள் தங்கி வாசம் பண்ணுவார்கள்.

## தேவனை துதிக்க வேண்டும்

**இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். சங் 22:3**

இரண்டு பேர் ரோஜா செடியைப் பார்க்கிறார்கள். தேவன் எவ்வளவு அழகாக ரோஜா மலரை படைத்திருக்கிறார் என்று ஒருவர் ஆண்டவரை துதித்தார். ஆனால் மற்றொருவர் ரோஜா எவ்வளவு அழகானது, ஆனால் இதைக் கொண்டு வந்து இப்படி முட்செடியிலா படைப்பது என்று முறுமுறுத்தார். நாம் துதிப்பதற்கு எத்தனையோ சாதகமான நிலை இருக்கும் போது தேவனை துதிக்காமல், சூழ்நிலைகளைப் பார்த்து முறுமுறுத்து குறைவுபட்டுக் கொண்டே இருக்க கூடாது. எந்த நிலையிலும் தேவனைத் துதிக்கும் போது அவர் நம் நடுவில் வந்து வாசம் பண்ணுவார். அதனால் தான் சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப்பாடு நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன் என்கிறார். எனக்கு அருமையான சகோதரிகளே தேவனுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை வேற நபருக்கோ, பொருளுக்கோ கொடுத்து தேவனை வேதனைப் படுத்தி இருப்போமானால் இந்த நாளில் ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கிறார். இன்று அவருடைய சத்தத்திற்கு நாம் செவி கொடுத்து இதய கதவைத் திறந்து எனக்குள் வாங்கப்பா என்று சொல்லுவோம் என்றால் அவர் நமக்குள் வந்து வாசம் பண்ணுவார். தொடர்ந்து அவருடைய கற்பனைகளை நம் வாழ்க்கையில் கைக்கொண்டு நடந்து, எந்நாளும், எப்பொழுதும் அவரை துதித்து மகிமைப்படுத்தும் போது அவர் நமக்குள் இருந்து நம்மை ஆசீர்வதித்து நடத்துவார்.